செயற்கை உடலுறுப்புகள் உற்பத்தி

*775. வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில், செயற்கை உடலுறுப்புகள் செய்யும் கூடம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அங்கு ஆண்டொன்றுக்கு எத்தனை உறுப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) அறிக்கையொன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றது.

கமுதி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மருந்தகம்

*776. வினா—திரு. எஸ். காதர்பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தையும், அதைச் சேர்ந்த மகப்பேறு விடுதியையும் அரசு எடுத்துக் கொள்ளும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்போது எடுத்துக் கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : எண் 1778, சுகாதாரத்துறை 5-7-1971 நாளிட்ட ஆணையில் கமுதி ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு ஏற்க ஆணை பிறப்பித்துள்ளது. அதைச் சேர்ந்த மகப்பேறு மருத்துவமனையை அரசு ஏற்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

மருத்துவ மனைகளுக்குக் கட்டடங்கள்

*777. வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் தாலுக்காவில், பந்தலூர், மசின்குடி என்ற இடங்களில் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.
(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 698-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS